விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 258 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 17 திங்கட்கிழமை (02.09.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(303)

## அடுத்த வாரம் கூடுகிறது
## ஐ.நா மனித உரிமைகள் பேரவை
### முதல் நாளிலேயே இலங்கை தொடர்பிலான விவாதம்

(ஜெனிவா)

ஜனாதிபதித் தேர்தல் இம்மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள சூழ்நிலையில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 57ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 9ஆம் திகதி ஜெனிவாவில் இடம்பெறவுள்ளது. (15ஆம் பக்கம் பார்க்க)

## திருக்கோணேஸ்வரருக்கு புதிய இராஜகோபுரம்
### நிர்மாணிப்பதாக ரணில் உறுதி




(திருகோணமலை)

திருகோணமலையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற திருக்கோணேச்சர ஆலயத்தில் இதுவரை நிர்மாணிக்கப்படாத இராஜகோபுரம் நிர்மாணிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதிபடத் 15

## இந்திய உறவை வலுப்படுத்துவேன்
### யாழில் சஜித் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

இந்தியாவுடனான உறவுகள் வலுப்படுத்தப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

யாழிலுள்ள 02

# இலங்கைத் தமிழரசுக் கட்சி
# சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு!
## மத்திய குழு தீர்மானித்ததாக சுமந்திரன் எம்.பி தெரிவிப்பு

(வவுனியா)



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு அளிப்பதென இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று (01) வவுனியாவில் உள்ள விருந்தினர் விடுதியொன்றில் இடம் பெற்றது. 02

## எரிவாயு விலையில் மாற்றமில்லை
03ஆம் பக்கம் பார்க்க

## அதிகரிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்
05ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர்க்கந்தனின் இரதோற்சவம்



## சஜித்துக்கான ஆதரவு என்பது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு
### மாவை சேனாதிராஜா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா 15

## விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய தேவை ஏற்படலாம்
### தயாராகுமாறு ஆணைக்குழு பணிப்பு

(கொழும்பு)

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையூடாக ஜனாதிபதி வேட்பாளர்கள் வெற்றியீட்டுவது கடினம் என்பதனால், விருப்பு வாக்குகள் வேட்பாளரது வெற்றியைத் தீர்மானிக்கும் நிலைமை உண்டு எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனவே இரண்டாவது விருப்புத் தேர்வையும் எண்ணுவதற்குத் 15

## தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்கு சஜித் நன்றி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்துள்ள நிலையில் அதற்கு சஜித் பிரேம 15

## தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ரணில், சஜித்திடம் தீர்வில்லை
### விக்னேஸ்வரன் எம்.பி கருத்து



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோர் தமது தேர்தல் விஞ்ஞாபனங்களில் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்தகத்தை உடைத்து ரூ. 4 1/2 இலட்சம் கொள்ளை

## சாவகச்சேரி நகரில் துணிகரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாவகச்சேரி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள பிரபல மருந்தகம் ஒன்றை உடைத்த கொள்ளையர்கள் அங்கிருந்த நான்கரை இலட்சம் ரூபாய் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு. இடம்பெற்றுள்ளது.மேற்படி கொள்ளைச் சம்பவம் தொடர்பில் மருந்தக உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிலும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பகல் வேளையில் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7,30)

# சண்டிலிப்பாயில் மரத்தில் தொங்கிய குடும்பஸ்தரின் சடலம்

(சண்டிலிப்பாய் )

சண்டிலிப்பாய் சீரணி அம்மன் ஆலய வீதியிலுள்ள மரத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கிட்ட நிலையில் நேற்று சடலம் மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சீரணிச் சந்தி சண்டிலிப்பாயைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான (வயது 48) காங்கேசு சசிக்குமார் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## குடும்பஸ்தர் சடலம் கீரிமலையில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கீரிமலையில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலையைச் சேர்ந்த யேசுதாசன் ரெஸ்மன் கிரிதொயிட் (வயது-32) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு தூக்கிட்டு உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தர விட்டார்.சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. (ந-7)

# தனிமையில் இருந்தவர் சடலமாக மீட்பு

## தெல்லிப்பழையில் சம்பவம்

தெல்லிப்பழை டச்சு வீதியில் தனிமையில் இருந்த இளைஞன் ஒருவர் சடலமாக நேற்று மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்டவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த யோகேஸ்வரன் கேசவன் (வயது 32) என அடையாளம் காணப்பட்டுள்ளது. விஷ ஜந்து தீண்டியதால் இறப்பு ஏற்பட்டிருக்கலாம் என மரணவிசாரணைகளின் போது ஊகிக்கப்படுகிறது.

மரணவிசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு பலாலிப் பொலிஸார் மூலம் அனுப்பி வைக்கப்பட்டது. (ந-7)

## இலங்கைத்...

பல மணிநேரமாக இடம்பெற்ற இக்கூட்டத்தில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதென தமிழரசுக் கட்சியின் மத்திய குழு தீர்மானம் நிறைவேற்றியதாக கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேந்திரனை ஆதரிப்பதில்லை என்ற தீர்மானம் மத்திய குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளதுடன் தமிழரசுக் கட்சியின் உறுப்பினராகிய அரியநேந்திரன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலக வேண்டும் என்றும் நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரை எமது கட்சி தீர்மானம் எதனையும் அறிவிக்காமையால் கட்சி உறுப்பினர்கள் பலவாறாகச் செயற்பட்டனர். தற்போது தீர்மானம் எடுக்கப்பட்டு சஜித் பிரேமதாஸ அவர்களுக்கு ஆதரவளிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால் கட்சி உறுப்பினர்கள் அதற்கேற்ப செயற்படுவார்கள் என்றும் சுமந்திரன் தெரிவித்தார். (ந-7)

## இந்திய...

தனியார் விடுதியொன்றில் நேற்றுக் காலை ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து தனது அரசியல்-பொருளாதார நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தும் போதே இவ்வாறு தெரிவித்தார். இந்தியா உலகில் இன்று ஒரு வல்லரசு அது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் நிரந்தர அங்கத்துவம் வகிக்கும் ஐந்து நாடுகளுடன் ஆறாவதாக இணையும் நிலையுள்ளது.

பூகோள ரீதியில் எமக்கருகில் அமைந்திருக்கும் அத்தகைய இந்திய வல்லரசு இலங்கையின் வரலாற்றோடும் பண்பாட்டுடனும் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

தனக்கும் இந்தியாவுக்கும் மிக நல்லுறவு உள்ளது என்றும் இந்திய உறவைப் பேணி வளர்க்கும் வெளிவிவகாரக் கொள்கை தனது ஆட்சியில் கடைப்பிடிக்கப்படும்.

இந்தியாவோ சீனாவோ எந்த வல்லரசுகளாயினும் இலங்கையின் தேசிய நலன்களைப் பேணிப் பாதுகாக்கும் அடிப்படையிலேயே தனது ஆட்சியில் வெளியுறவுக் கொள்கை அமையும் என்றார்.

மேலும், எனது தந்தையார் முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாசா ஒரு நேர்மையான திடமான அரசியல் தலைவர்.

ஆயினும் அவர் இந்திய உறவு தொடர்பில் கடைப்பிடித்த கொள்கைகள் மூலம் கற்றுக்கொண்ட பாடங்கள் தன்னிடம் உள்ளதாகத் தெரிவித்த அவர் தான் ஒரு போதும் தனது தந்தை யார் இந்திய உறவு தொடர்பில் கடைப்பிடித்த நிலைப்பாட்டில் இல்லையென்றும் தன்னிடம் புதிய அணுகுமுறைகளே உள்ளன எனவும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ந-7)


பல ஆயிரம் கடந்த பதிவுகள்

பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை பொருத்திய சாதனைகள்

உங்கள் கல்யாண மாலை

சர்வதேச இலவச திருமண சேவையை உலகின் எப்பாகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ள

www.kalyanamalai.lk

இணையத்தளத்தைப் பாருங்கள்

பதிவுக்கட்டணம் ரூபாய் 4,000/=



தொடர்புகளுக்கு :- கல்யாண மாலை

இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

Email : kalyanamalai.jaffna@gmail.com



மலிவு விலையில்

பாடசாலை மாணவர்களுக்கான (SOCKS) காலுறைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலை நலன்புரிச் சங்கங்களுக்கு விஷேட கழிவு வழங்கப்படும். (C-1103)

தொடர்புகளுக்கு:

076 315 6470



பதவி வெற்றிடம்

- அலுவலகச் செய்தியாளர்கள் (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- முகாமைத்துவ உதவியாளர்கள் (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது 076 097 3121 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர், வலம்புரி நாளிதழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிவாயு விலையில் மாற்றமில்லை

## லிட்டோ அறிவிப்பு

(கொழும்பு)

மாதாந்த எரிவாயு விலைத் திருத்தத்தின் பிரகாரம் இம்முறையும் லிட்ரோ எரிவாயுவின் விலையில் எவ்வித திருத்தமும் இடம் பெறாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயத்தை லிட்ரோ எரிவாயு நிறுவனத் தலைவர் முதித பீரிஸ் ஊடகமொன்றிற்கு கருத்து தெரிவிக்கும் போது குறிப்பிட்டுள்ளார்.

கடைசியாக ஜூலை இரண்டாம் திகதி எரிவாயு விலைத் திருத்தம் செய்யப்பட்டது.

இதையடுத்து ஒகஸ்ட் மாதத்தில் எந்த மாற்றமும் செய்யப்படவில்லை.

இதனடிப்படையில் 12.5 கிலோ லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை ரூபா 3690 ஆகவும், ஐந்து கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை ரூபா 1482 மற்றும் 2.3 கிலோ எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை ரூபா 694 ஆகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## நீலங்களின் சமர்

# வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது கிளிநொச்சி இந்துக் கல்லூரி




கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கும் கிளிநொச்சி இந்துக் கல்லூரிக்கும் இடையிலான நீலங்களின் சமர் எனப்படும் துடுப்பாட்டப் போட்டி கடந்த 30, 31 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

முதல் நாளில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மத்திய கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்து ஆடி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்குத் துடுப்பெடுத்து ஆடிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இறுதிநாள் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இரண்டாம் நாளில் முதலில் துடுப்பெடுத்து ஆடிய கிளிநொச்சி மத்திய கல்லூரி 66 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. 94 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய கிளிநொச்சி இந்துக் கல்லூரி 4 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டாம் நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் மாவட்டச் செயலாளர் சு.அருமைநாயகம் வெற்றிக் கேடயங்களை வழங்கினார். (நி-350)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3211

### மிதுளா

ஸ்கூல்ல படிக்கிற வயசுல நான் இந்து வெறியனா இருந்தேன்...




அப்புறம் அவ அப்பாவுக்கு ட்ரான்ஸ்பர் ஆகி, இந்து வேற ஊருக்கு போயிட்டா...

### துஷாரா




அய்யோ என் பொண்டாட்டி எங்க சாப்டனு கேட்டா... நான் என்னடா சொல்லுவன்



உங்க HOTEL ல்ல சாப்டனு சொன்னா அவ என்னைய... HOSPITAL லுக்கு அனுப்பிருவாலே...

### தினேஷ்

Sept

“டேய் நில்லுடா... இவ்ளோ வேகமா போய் என்ன பண்ண போற...”



2024

### அஷ்வினி

இந்தியாவில் ஆண்கள் அதிகம் விரும்பி சாப்பிடும் உணவாக “உப்புமா” முதலிடத்தில் உள்ளது!-ஆய்வு அறிக்கையில் தகவல்



எது விரும்பி சாப்பிடுறோமா! பேசமே போய்ரு

### அகல்யா

வீட்டில புதுசா வந்த கல்யாண பத்திரிகை பார்க்கும் போது....




என்ன?? நம்ம கூட படித்த ப்ரியாவோட பொண்ணுக்கு கல்யாணமா

### சனா

ஏழைகளும் AC யில் இருக்கனும்ன்னு தான்...



குளிர் காலத்த படைத்தார் ஆண்டவன்...😊😊

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தீர்த்தம்

கேணியிலே முருகன் அவன் தீர்த்தம் ஆட
கிளர்ந்தேதான் பக்தரெலாம் அவனின் நாமம்
வான்வரையில் கேட்டிடவே கூவி நிற்பர்
வடிவழகன் நல்லூரான் விழவும் ஓய
ஊனுருகி உயிருருகி கண்ணீர் சோர்ந்து
ஒருவருடம் காத்திருக்கவேண்டும் என்று
தேன் அனைய நினைவுகளை உள்ளே வைத்து
தேம்பித்தான் அடியரெலாம் ஏங்கி நிற்பர்

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

## அதிகரிக்கும் தேர்தல் முறைப்பாடுகள்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடு களின் எண்ணிக்கை ஆயிரத்து 745 ஆக அதிகரித்துள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியிலேயே இந்த முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.

அதேநேரம் நேற்று முன்தினம் தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பில் 153 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. (நி)




## நல்லைக் கந்தவேளே!

என்செயலி னாலாவ தொன்றில்லை யெல்லாமும்
உன்செய லென்றுணர்ந்தேன்
முன்செய்த வூழ்வினை பின்வந்து பாய்வதை
முற்றாய்ப் புரிந்து கொண்டேன்
என்செய்த போதிலும் எதிர்செய்த போதிலும்
எல்லாமு முனதுவசமே
நனறென்று நீநின்று நலமின்று காட்டுவாய்
நயநல்லைக் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர்,
நவ.பாலகோபால்.

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் இளங் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று திங்கட்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம் பெறும்.

மாலை 6.45 -7.10 மணிவரை யாழ்.இந்திய துணைத் தூதரக இசைத்துறை மாணவர்களின் குழு இசையரங்கம் இடம்பெறும். வாசஸ்பதி ரஜீந்திரன் நெறியாள்கையில் இடம் பெறும்.

இந்நிகழ்வில் வயலின்- இ.நிரோஜன், மிருதங்கம் மு. சுலக்சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

7.15-8.05 மணிவரை வவுனியா நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவர்களின் நிருத்தியார்ப்பணம் இடம்பெறும். இந்நிகழ்வில் நட்டுவாங்கம் -சூரிய யாழினி வீரசிங்கம், பாட்டு- எம்.எஸ். பிரதீபன், ப. சிவமைந்தன், வயலின்- இ. நிரோஜன், கீபோட்- ந. செல்வச்சந்திரன், மிருதங்கம்- ம. லோகேந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி)

## தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவு தினம்



(கொழும்பு)

தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 44 ஆவது நினைவு தினம் வவுனியாவின் நகர மத்தியில் அமைந்துள்ள தனிநாயகம் அடிகளாரின் சிலை அருகே இடம் பெற்றது.

வவுனியா நகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந் நிகழ்வில் தனிநாயகம் அடிகளாரின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. (நி)

## அருள்வாய் அழகனே!

நல்லை நகர் நாயகனாம்- எங்கள்
நல்லைக் கந்தனின் தீர்த்தத் திருநாள் காண வாரீர்

தீர்த்தமாடும் வேலனின் திருமேனி அழகுதனை
கண்ணாரக் கண்டு களிப்புடன் பாரீர்!

மெய்யுருகி பாவிசைத்துப் பொருள் கூறி
மெய் ஞானச் சுடரான முருகன் புகழ் கேளீர்!

வடிவேலவன் கழல் பணிந்து பாத மலர் தூவி
வடிவான எங்கள் நல்லூரான் திருமுகம் காணீர்!

அழகழகாய் ஆடையணிந்து அற்புதமாய் காட்சிதரும்
அழகனவனின் அருட்கடாச்சம் பெறுவீர்!

மிஷாந்தி ஜெயசிங்கம்,
அரியாலையூர்.

## இராசிபலன்

02.09. 2024
ஆவணி 17, திங்கட்கிழமை
சதுர்த்தசி காலை 6.20 மணிவரை
மகம் பின்னிரவு 1.45 மணிவரை
சுபநேரம் 12.05-1.35 மணிவரை
இராகுகாலம் 7.35-9.05 மணிவரை
அமாவாசை விரதம்
சந்திராஷ்டமம் - மூலம், பூராடம்
வல்லிபுர ஆழ்வார் கொடியேற்றம்

வளவன்

**மேஷம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அழகு சாதனப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**ரிஷபம்** பூர்விகம் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, உடன் பிறப்புக்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** குலதெய்வ வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், கடினமான வேலைகளைக் கூட நயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கடகம்** வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்கள் மூலம் சுப செய்திகளைப் பெறுவீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**கன்னி** அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் கிடைக்கலாம், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**துலாம்** அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சேமிப்பு உயரும் நாள்.

**தனுசு** குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மகரம்** வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்ய முற்படுவீர்கள்.

**உண்மையான மனிதனை அவன் தனித்திருக்கும் போது அறியலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் மாத இராசி பலன்கள்-2024

## நேர்மையாகவும் வேகமாகவும் செயற்படும் மேஷ ராசியினரே




நீங்கள் எடுத்த காரியத்தை சிரத்தையுடன் செய்பவர்கள். இந்த மாதம் ராசிநாதன் செவ்வாய் சஞ்சாரத்தால் உங்களுக்கு அனுகூலமாக இருப்பதாலும் நினைத்த காரியத்தை நினைத்தபடி நடத்தி முடிக்க முயற்சிகளை மேற்கொள்வீர்கள்.

புதிய நபர்களின் அறிமுகம் கிடைப்பதுடன் அவர்களால் நன்மையும் உண்டாகும். ஆனாலும் அஷ்டமத்துச் சனியால் தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வீண் ஆடம்பரச் செலவுகளை தவிர்ப்பது நலம் தரும்.

தொழில், வியாபாரம் சுமாராக நடக்கும். பழைய பாக்கிகளை வசூல் செய்வதில் வேகம் இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த வேலையை செய்து முடித்து நன்மை பெறுவீர்கள். குடும்பத்தில் சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். உறவினர் மூலம் நடக்க வேண்டிய காரியங்களில் தாமதம் ஏற்படலாம்.

கணவன், மனைவிக்கிடையே மனம் வருந்தும்படியான சூழ்நிலை ஏற்படும். பிள்ளைகள் நீங்கள் சொல்வதைக் காதில் வாங்காதவர்போல் இருப்பார்கள். எனவே எல்லோரையும் அனுசரித்துச் செல்வதால் நன்மை உண்டாகும்.

வீட்டில் சுபநிகழ்ச்சிகளுக்கான வேலைகளைத் தொடங்குவீர்கள். புதியதாக மனை, வாகனம் வாங்குவதற்கு அனுகூலமாக கைக்கு பணம் வந்து சேரும்.

கலைத்துறையினருக்கு சக கலைஞர்களிடம் திடீர் கருத்து வேற்றுமை ஏற்பட்டு நீங்கும். ஒப்பந்தங்களில் சரியான முடிவுக்கு வர முடியாத தடுமாற்றம் ஏற்படலாம். உடன் பணிபுரிபவர்களிடம் பேசும்போது கவனமாக பேசுவது நல்லது. வாகனங்களில் செல்லும்போதும் பயணங்களின் போதும் கவனம் தேவை.

அரசியல் துறையினர் திறமையான பேச்சின்மூலம் எதையும் வெற்றிகரமாக செய்து முடித்து ஆதாயம் அடைவீர்கள்.

எதிர்ப்புகள் குறையும். பணவரத்து கூடும். மாணவர்களுக்கு சோம்பேறித்தனத்தை விட்டுவிட்டு பாடங்களை நன்கு படிப்பது வெற்றிக்கு வழி வகுக்கும்.



பரிகாரம்: சனிக்கிழமை தோறும் அருகிலிருக்கும் பெருமாள் கோவிலில் உள்ள கருடமூர்த்தியை வணங்கவும்

அதிஷ்ட கிழமைகள்:
வளர்பிறை: புதன், வெள்ளி
தேய்பிறை: புதன், வெள்ளி

சந்திராஷ்டம தினங்கள்: 9, 10, 11

அதிர்ஷ்ட தினங்கள்: 2, 3, 4, 29, 30

## வேகத்துடன் விவேகமாகவும் நடந்து கொள்ளும் ரிஷப ராசியினரே




நீங்கள் சிக்கனமாக நடந்து கொள்பவர்கள். இந்த மாதம் ராசிநாதன் சுக்கிரன் ஆறாம் ஸ்தானத்தில் மறைந்திருக்கிறார்.

ஆனால் அவர் ஆட்சி பெற்று சஞ்சாரம் செய்கிறார். அறிவுத்திறன் அதிகரிக்கும். உங்களது பேச்சு மற்றவரை மயக்குவதுபோல் இருக்கும். ருசியான உணவை உண்டு மகிழ்வீர்கள். ராசியில் இருக்கும் குரு மனநிம்மதியை தருவார். சாமர்த்தியமாகக் காரியங்களை செய்து வெற்றி பெறுவீர்கள்.

தொழில் ஸ்தானத்தில் சனி இருக்கிறார். தொழில், வியாபாரம் முன்னேற்றம் காணும். தொழில் வளர்ச்சிக்காக சில திட்டங்களை செயற்படுத்த முடிவெடுப்பீர்கள். பணவரத்து திருப்தி தரும். வியாபார ஸ்தலத்திற்காக புதியதாக இடம் வாங்குவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்குச் செயற்திறமை கூடும். பயணங்களும் செல்ல நேரிடலாம். பணி நிமித்தமாக அலைய வேண்டியதிருக்கும். குடும்ப ஸ்தானத்தை செவ்வாய் அலங்கரிக்கிறார்.

குடும்பத்தில் சிறிது நிம்மதி குறைவு ஏற்படலாம். சுற்றத்தினர் வருகை இருக்கும். கணவன், மனைவிக்கிடையே சிறிது பிரச்சினை வரலாம். பிள்ளைகள் மூலம் மனமகிழ்ச்சி ஏற்படும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

உறவினர்கள், நண்பர்கள் மூலம் ஆதாயம் பெறுவீர்கள். அறிவுத்திறன் அதிகரிக்கும். இனிமையான வார்த்தைகளால் சிக்கலான காரியத்தைக் கூட எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.

கலைத்துறையினருக்கு பணவரத்து இருக்கும். எடுத்த முடிவை செயற்படுத்தும் முன் ஒரு முறைக்கு இருமுறை ஆலோசிப்பது நல்லது. எந்த ஒரு காரியத்திலும் அவசர முடிவு எடுக்கத் தூண்டும். வீண் வாக்குவாதங்களால் பகையை வளர்த்துக் கொள்ளாமல் இருப்பது நல்லது.

அரசியல் துறையினருக்கு வீண் அலைச்சலுக்கு பிறகே எந்த ஒரு காரியமும் நடந்து முடியும். வேலை தொடர்பாக அலைய வேண்டி இருக்கும்.

வரவேண்டிய பாக்கிகள் தாமதமாக வந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் உண்டாகும். எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சில திட்டங்களை ஆலோசிப்பீர்கள்.



பரிகாரம்: வெள்ளிக்கிழமை தோறும் சிவன் கோவிலை வலம் வாருங்கள்.

அதிர்ஷ்ட கிழமைகள்:
வளர்பிறை: ஞாயிறு, திங்கள், வியாழன்
தேய்பிறை: ஞாயிறு, திங்கள்






சந்திராஷ்டம தினங்கள்: 12, 13.

அதிர்ஷ்ட தினங்கள்: 5, 6

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அலங்கார கந்தனின் ரதோற்சவம்

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா நேற்றுக்காலை மிகச்சிறப்பாக இடம்பெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும், வெளிநாடுகளில் இருந்தும் இலட்சக்கணக்கான அடியவர்கள் கலந்து கொண்டு நல்லூர் கந்தனின் அருளாசியைப் பெற்றிருந்தனர்.

ஆயிரக்கணக்கான அடியவர்கள் அங்கப்பிரதட்சணம் செய்தும், நூற்றுக்கணக்கானவர்கள் காவடிகள் எடுத்தும் கற்பூரச்சட்டிகள் ஏந்தியும் பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி நல்லூர் கந்த பெருமானை பக்திமயத்துடன் வழிபட்டிருந்தனர். (படங்கள்:- சிவசாந்தன்)

## கிளி. மாவட்ட வைத்தியசாலையில் ‘O’ வகை குருதிக்கு தட்டுப்பாடு

### குருதிக் கொடையாளர்களுக்கு அழைப்பு

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் O வகை குருதி தட்டுப்பாடு நிலவுவதாக மாவட்ட வைத்தியாலையின் இரத்த வங்கி தெரிவித்துள்ளது.

மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியில் O+ மற்றும் O- இரத்த வகைகளுக்கு தட்டுப்பாடு காணப்படுகிறது எனவே குருதிக் கொடை வழங்கும் அன்பர்கள் மாவட்ட வைத்தியசாலையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு தினமும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை இரத்த தானம் செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஆகவே மேற்படி அவசர அவசிய நிலமையினை கருத்தில் கொண்டு குருதிக் கொடை அளிக்குமாறு பொது மக்களிடம் கிளிநொச்சி மாவட்ட இரத்த வங்கி கோரியுள்ளது. (நி-316)

## வவுனியாவில்

## பிரசார பதாகைகளை அகற்றிய பொலிஸார்

(வவுனியா)

வவுனியாவில் காட்சிபடுத்தப்பட்டிருந்த ரணில் மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பதாகைகள் பொலிஸாரால் அகற்றப்பட்டன.

வவுனியாவில் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் கலந்து கொள்வதற்காக ரணில் விக்கிரமசிங்க வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்திருந்தார்.

இந் நிலையில் வவுனியா நகரப்பகுதிகளில் ரணில் மற்றும் இராஜாங்க அமைச்சர் காதர்மஸ்தான் ஆகியோரது உருவங்கள் பொறிக்கப்பட்டிருந்த பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

குறித்த பதாகைகள் ஜனாதிபதி ரணில் வருகை தருவதற்கு முன்பு பொலிஸாரால் அகற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## சென்னை-யாழ்ப்பாணம் இடையே புதிய விமான சேவை



(யாழ்ப்பாணம்)

சென்னைக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையேயான புதிய விமான சேவை நேற்று ஆரம்பமாகியது.

நேற்று முதல் தினந்தோறும் சென்னையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கான விமான சேவை நடத்தப்படவுள்ளதாக இண்டிகோ ஏயார் லைன்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

தற்போது யாழ்.பலாலிக்கு தினசரி விமான சேவையை இந்தியாவின் அலையன்ஸ் ஏயார் விமானம் நடத்துகிறது.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பதில் மாவட்ட செயலாளர் மருதலிங்கம் பிரதீபன், யாழ். இந்திய துணை தூதுவர் சாய் முரளி, விமானப்படை அதிகாரிகள், இந்திய துணைத் தூதரக அதிகாரிகள், பதவிநிலை அதிகாரிகள், பயணிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (நி)

## பேருந்துக் கட்டணத்தை குறைக்க முடியாது

(கொழும்பு)

எரிபொருளின் விலை குறைக்கப்பட்டுள்ள போதிலும், முச்சக்கரவண்டி சங்கங்களுக்கு விலையைக் குறைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தொழில் ரீதியான முச்சக்கர வண்டி சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்றிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளது.


அதன்படி, தங்களது பயணக் கட்டணங்களைத் திருத்தியமைக்கும் அளவுக்கு எரிபொருள் விலை குறைக்கப்படவில்லையென அந்தச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், பேருந்து பயணக் கட்டணத்தைக் குறைக்க முடியாது எனத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முதல் முறையாக
# 'ஓம்' பர்வத மலையில் பனிக்கட்டிகள் மாயம்




(டில்லி)

உத்தரகாண்ட் ஓம் பர்வத மலைப் பகுதியில் முதல் முறையாக பனிக்கட்டிகள் முற்றிலும் மாயமானது பலருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

உத்தரகாண்ட் மாநிலத்தில் வியாஸ் பள்ளத்தாக்கு பகுதியில் சுமார் 14,000 அடி உயரத்தில் அமைந்துள்ளது ஓம் பர்வத மலை. இதன் வடிவமைப்பு இந்தி எழுத்து ஓம் போல இருப்பதால் இது ஓம் பர்வத மலை என அழைக்கப்படுகிறது. இந்த மலை எப்போதும் பனி படர்ந்து காணப்படுவதால் இது பிரபல சுற்றுலாத் தளமாக விளங்குகிறது.

இந்நிலையில் இந்த ஓம் பர்வதமலையில் கடந்த வாரம் பனிக்கட்டிகள் முற்றிலும் மாயமாகி வெறும் பாறைகளாக காட்சியளித்தன. இதுபோல் ஓம் பர்வத மலை பனி இல்லாமல் இருந்தது இதுவே முதல் முறை. இது இப்பகுதி மக்களுக்கும் பார்வையாளர்களுக்கும் மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளித்துள்ளது. (நி)

## பாப்பரசர் இந்தோனேசியாவுக்கு விஜயம்



(ஜகார்த்தா)

புனித திருத்தந்தை பிரான்சிஸ் நாளை செவ்வாய்க்கிழமை இந்தோனேசியாவிற்கு விஜயம் செய்யவுள்ளதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது.

ஆசிய சுற்றுப்பயணத்தின் ஒரு பகுதியாகவே பாப்பரசரின் இந்தோனேஷியா பயணம் அமைந்துள்ளது.

இப்பயணத்தின் போது சமய ஒற்றுமையின் பிரதிபலிப்பாக, தலைநகர் ஜகார்த்தாவில் உள்ள முக்கிய முஸ்லிம் சூதியையும் கத்தோலிக்க தேவாலயத்தையும் இணைக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள சுரங்கப்பாதையையும் பாப்பரசர் மேற்பார்வையிடுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுரங்கப்பாதைக்கு நட்புச் சுரங்கப்பாதை என்று பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# பென்சில்வேனியா பேரணியில் ட்ரம்ப் மேடையில் ஏற முயன்ற நபரால் பரபரப்பு



(வோஷிங்டன்)

நவம்பர் மாதம் நடக்கவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்.

கடந்த ஜூலை 13 ஆம் திகதி பென்சில் வேனியாவில் நடந்த பேரணியில் ட்ரம்ப் மீது நடந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தை அடுத்து அவருக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டது.

ஆனால் தற்போது மீண்டும் பென்சில் வேனியாவில் உள்ள ஜான்ஸ்டவுன் பகுதியில் ட்ரம்பின் பேரணியில் மர்ம நபர் தடையை மீறி ட்ரம்பை நெருங்க முயற்சி செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பாக வெளியான வீடியோ காட்சிகளில், தாடி வைத்து கூலிங் கிளாஸ் அணிந்த நடுத்தர வயது நபர் ஒருவர், பொதுமக்கள் தடையை மீறி செய்தியாளர்கள் இருந்த பகுதிக்குள் நுழைந்து மேடையில் ஏற முயன்றார்.

அவரை தடுத்து நிறுத்திய பொலிஸ் அங்கிருந்து அழைத்துச் சென்றது.

சிறிது நேரத்திலேயே கூட்டத்திலிருந்த மற்றொரு நபரையும் கைவிலங்கிட்டு பொலிஸ் அழைத்துச் சென்றது.

தாடி வைத்த நபருக்கும், இரண்டாவது நபருக்கும் தொடர்பு உள்ளதா என்பது இதுவரை தெரியவரவில்லை. (நி)




# போ
## காசா
# 49 பே


(காசா)

3 நாட்கள் போர்
நிலையிலும்
அகதிமுகாம்
வான்வழித் தாக்

இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு கடந்த ஆண்டு ஒக்டோபரில் கொடூரத்தாக்குதல் நடத்தியதில், இஸ்ரேல் மக்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

பணயக்கைதிகளாக சிலர் சிறைபிடித்துச் செல்லப்பட்டனர். இதற்கு பதிலடியாக, காசாவை இலக்காகக் கொண்டு இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்

## மனித வாடை
## திடீரென



உலகின் 'தனிமையானது' என்று அழைக்கப்படும் பூவெட் தீவு தென்னாபிரிக்காவிற்கும் அந்தார்ட்டிக்காவிற்கும் இடையில் அமைந்துள்ளது.

இது மனித வாழ்வின் எந்த அறிகுறியும் இன்றி 1,400 மைல்கள் தொலைவில் உள்ளது.

மர்மமான நிலப்பரப்பு ஒரு இருண்ட கடந்த காலத்தால் சிதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ோர் நிறுத்தத்திலும்

# சாவை தாக்கிய இஸ்ரேல்!

## பர் உயிரிழப்பு



**போர் நிறுத்தம் அறிவிக்கபட்டிருந்த ும் காசாவில் அமைந்துள்ள ாம் மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 49 பேர் உயிரிழந்தனர்.**

தீனியர்கள் பலியாகி உள்ளனர்.

இந்நிலையில், தொடர் போரால் காசாவில் பலருக்கு தொற்று வியாதிகள் பரவும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இந்தச் சூழலில் காசாவில் உள்ள 6.4 லட்சம் குழந்தைகளுக்கு உலக சுகாதார அமைப்பு போலியோ சொட்டு முகாம் நடத்த முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னிட்டு 8 மணி நேரம் போர்நிறுத்தம் மேற்கொள்ளப்படும் என இஸ்ரேல் படைகள் மற்றும் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்கும் இடையே உடன்பாடு ஏற்பட்டது.


இந்தச் சூழலில், அதிகாரப்பூர்வ முகாம் செயற்பட தொடங்குவதற்கு முன், நாசர் மருத்துவமனை வார்ட்களில் அடையாள முகாம் நடத்தி, சில குழந்தைகளுக்கு மருத்துவ அதிகாரிகள் போலியோ சொட்டு மருந்து வழங்கினர். இந் நிலையில், காசாவில் இஸ்ரேல் படையினர் திடீர் தாக்குதலில் ஈடுபட்டனர்.

2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவ மற்றும் சமூக நல பணியாளர்கள் முகாமுக்கு தயாரான நிலையில், காசா முனை பகுதியில் அமைந்த அகதிகள் முகாம்களில் ஒன்றான நசீரத பகுதியில் மேற்கொள்ளப்பட்ட வான்வழித்தாக்கு தலில் 19 பேர் கொல்லப் பட்டனர். அவர்களில் 9 பேர் ஒரே குடும்பத்தினர்கள் ஆவர்.

காசாவில் தொடர்ந்து அடுத்தடுத்து நடந்த தொடர் தாக்குதல்களில் 30 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். எனினும், பயங்கரவாதிகளை தாக்கி, அவர்களுடைய இராணுவ உட்கட்டமைப்பை தகர்த்தோம் என இஸ்ரேல் படையினர் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## டையே வீசாத மர்மத் தீவில்

# ன தோன்றிய ஒளி



கப்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அட்லஸ் அப்ஸ்குராவின் கூற்றுப்படி, 1964 ஆம் ஆண்டில், கைவிடப்பட்ட படகு, பயணிகள் யாரும் இல்லாமல், யாரும் கப்பலுக்கு உரிமை கோராமல், பூவெட்டில் மூழ்கியது.

இந்தச் சம்பவம் இடம்பெற்று 15 ஆண்டுகளுக்கு பிறகு அந்த பகுதியில் மிகப்பெரிய வெடிப்பு ஏற்பட்டு ஒளி தோன்றியதாக கூறப்படுகிறது. அந்த வெடிப்பு எதனால் ஏற்பட்டது என்பது தொடர்பில் எவ்வித தகவலும் வெளியாகாத நிலையில் மர்மம் நீடித்தது.

ஆனால் இப்போது அது ஒரு ரகசிய தென்னாபிரிக்க இஸ்ரேலிய கூட்டு அணுகுண்டு வெடிப்பால் ஏற்பட்டதாக பரவலாக ஊகிக் கப்படுகிறது. இருப்பினும் அவர்கள் இருவரும் அதற்கு பொறுப்பேற்கவில்லை.

மனித வாழ்க்கைக்கான எந்த அறிகுறியும் இல்லை என்றாலும் தீவில் மற்ற உயிரினங்கள் வசிக்கலாம் என ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். (நி)

## ரஷ்யாவின் பெல்கொரோட் மீது

# உக்ரைன் தாக்குதல்

### ❖ ஐவர் உயிரிழப்பு
### ❖ 46 பேர் காயம்



(மொஸ்கோ)

தென்மேற்கு ரஷ்ய நகரமான பெல்கொரோட் மீது உக்ரைன் மேற்கொண்ட தாக்குதலில் ஐவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 46 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஏழு குழந்தைகள் உட்பட 37 பேர் உக்ரைனின் வடக்கே சுமார் 40 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தத் தாக்குதலுக்கு ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

உக்ரைனின் இராணுவமயமாக்கல் உட்பட அனைத்து இலக்குகளையும் அடையும் வரை ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கை தொடரும் என்று அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதல் தொடர்பாக குற்றவியல் வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாக ரஷ்யாவின் விசாரணைக் குழு தெரிவித்துள்ளது.

அண்மை காலமாக பெல்கொரோட் மற்றும் பிற ரஷ்ய எல்லைப் பகுதிகள் மீது உக்ரைன் தனது தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் சு.வித்தியானந்தன் நூற்றாண்டு விழா மலர்- நூல் மதிப்புரை

பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தன் பன்முக புலமை செயல் நீட்சிகளுடன் தமிழியல் புலத்தில் நிறை குடமானாவர்.

அவரின் பன்முக ஆளுமையினையும் அறிக்கை பரிமாணங்களையும் வெளிக்கொண்டு வரும் மாணவரில் கனதியான வரைபுகளை நிறைதொகுப்பாக்கி தந்துள்ளார் கலாநிதி தி.கமலநாதன்.

பேராசிரியர்.சு.வித்தியானந்தனது அறிவளிக்கையில் சுவறியமை. இக்கட்டான சூழமைவில் யாழ்ப்பாணத்தில் கல்வியல் கல்லூரியை நிறுவுவதற்கு அயராது உழைத்தமை. அதன் முதலாவது பீடாதிபதியாக இருந்து இயங்கியமை. போர் முழுக்கத்தினூடே தமது கலாநிதி பட்டத்தை நிறைவு செய்தமை. முதலாம் அனுபவ பதிவுகளுடன் இந்தத் தொகுப்பை சிறப்பாக செய்து நிறை வேற்றி உள்ளார்.

ஓராண்டாக மேற்கொண்ட தொடர் முயற்சியின் செழுமை கொண்ட வரிசையாக வித்தியின் நூற்றாண்டு விழா மலரை கமலநாதன் தொகுத்து தந்துள்ளார்.

தொகுப்பு முயற்சி என்பது மிகவும் கடுமையான பணி. ஓராண்டு கால நீட்சியைக் கொடுத்தாலும் உரிய நேரத்தில் ஆக்கங்களைப் பெற்றுக் கொள்ளுதல் மிகவும் கடினம். அத்தகைய செயலோட்டத்தின் ஊடே நிறைவு கொண்ட பனுவல் ஆக்கம் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வேண்டியவர்கள் அனைவரையும் எழுதச்செய்தமை மலரை நிறைவு செய்துள்ளது.

தமிழ் தேசிய எழுச்சியில் அறிவாந்த குறியீட்டு வடிவினராக விளங்கியவர் பேராசிரியர்.சு.வித்தியானந்தன். அவருடன் இணைந்து பணியாற்றியோர், கல்வி கற்றோர், புலமையுறவு கொண்டோர், நட்பு நெறியுற்றோர் என்ற பல திறத்தினரதும் ஆக்கங்கள் பனுவலிற் பதிவுற்றுள்ளன.

அவுஸ்திரேலியா. நியு-சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதில் துணைவேந்தர் பேராசிரியர் இளைய தம்பி அம்பிகைராசா அவர்களின் தொடக்கப் பதிவுகளுடன் நூற்றாண்டு மலர் விரிவு கொள்கின்றது. பேராசிரியர் வித்தியானந்தனுடன் தொடர்புபடுத்தி நூற்றாண்டு மலராக்கம் பற்றிய செவ்வியற் கோட்பாட்டை முன்வைத்துள்ளார்.

தமிழ் அடையாள நெருக்கடி மேலெழுந்த முரண்கொள் அரசியற் சூழலில் ஆழ்ந்து நிலைகொண்ட தமிழ் அடையாளத்தை அறிவு நிலையிலும் ஆய்வு நிலையிலும் அளிக்கை நிலையிலும் வரைபு செய்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.

பின்காலணியச் சூழலில் தமிழின் நவீனத்துவத்தை உயர் கல்வி நிலையில் பேராசிரியர் ஒழுங்கமைத்தவர். மரபு வழித் தமிழ்ப் புலமைத் தேட்டத்தையும் நவீன அறிவு மற்றும் ஆய்வு விசைகளையும் ஒன்றிணைத்தவர்.

தமிழியல் அடையாளத்தை உலகளவில் விரிவு கொள்ளும் செயற்பாட்டின் முன்னெடுப்பாக தமது கலாநிதிப்பட்ட ஆய்வை ஒக்ஸ்பேட் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டவர். அதன் தொடர்ச்சியாகவே உலக தமிழாய்வு நிறுவனத்திலும் பங்கு கொண்டவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உலகளாவிய தமிழியல் ஆய்வின் நடுநிலையமாக விளங்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் அமைப்பு நிலையிலும் தொழிற்பாட்டு நிலையிலும் ஆக்க வழியமைத்தவர். தமிழியலை விரிவுபடுத்தும் நோக்குடன் பல்வேறு அறிவுத்துறைகளையும் ஒன்றிணைக்கும் புலமை வளமாக்கலையும் முன்னெடுத்தார்.

யாழ்.பல்கலைக்கழகத்தை முழு நிறைவாக்கும் அவரது உயர்கல்வி முகாமைத்துவ நெறியின் பெறுபேறுகளுள் ஒன்றாக மருத்துவபீடம் கிடைக்கப்பெற்றது. பேராசிரியர் ஹூவர் பேராசிரியர் கனகசுந்தரம் முதலாம் உலகப் புகழ் பெற்ற அறிஞர்களை அவர் மருத்துவபீடத்திற்கு வரவழைத்தார். தரச்சிறப்புமிக்க மருத்துவர்களை தமிழ் சூழலில் உருவாக்குவதே அவரின் இலக்காக அமைந்தது.

மொழியின் வளத்திலும் பண்பாட்டு செறிவிலும் நாட்டுப் புறக் கலைகளின் முக்கியத்துவத்தை மகிழ புனைவியம் (Romanticism) வலியுறுத்தியது. பல்கலைக்கழக நிலையில் அந்த கலைக் கருத்துக்கு வளம் சேர்த்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன்.

நாட்டுக் கூத்தின் ஆன்மாவைச் சிதைக்காது நவீன அரங்கக் கட்டமைப்புக்குள் கொண்டு வந்தார். அத்தோடு நின்று விடவில்லை. அழிவு நிலையில் இருந்த வாய்மொழிப் பாடல்களைத் தேடி தொகுத்து அச்சேற்றம் செய்தார். நாட்டுப் புறவியலை பாடத்திட்டத்திலும் உள்ளடக்கினார். பல்கலைக்கழகத்தையும் உயர்கல்வியையும் சமூகத்தில் இருந்து பிரித்து இயக்கும் "தந்தக் கோபுரம்" என்ற நிலையை தகர்ப்புக்கு உள்ளாக்கினார்.

கிராமிய விழாக்கள், பள்ளிக்கூட நிகழ்ச்சிகள், கோயில் அரங்குகள் என்ற செயற்பாடுகளில் பங்கு கொண்டார்.


மரபுவழி தமிழறிஞர்களையும் கலைஞர்களையும் பல்கலைக்கழகத்திலே கௌரவித்தார்.

சமூகத்தில் விளிம்பு நிலையினர் பொருண்மிய இடரின்றி கற்பதற்குரிய நிதியொழுங்கு வசதிகளை பேராதனை பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலும் செய்து கொடுத்தமை சமூகத்தில் நிலைக்குத்து மேல் அசைவியக்கத்திற்கு அவர் தந்த பெரும் பங்களிப்பு!

விரிந்த தமிழ் தேசிய உருவாக் கத்தில் நேரடியாக பங்கு கொண்டார்.

கிறீஸ்தவர் தமிழ் தொண்டு, இஸ்லாமிய தமிழ்த் தொண்டு ஆகியவற்றை ஆவணப்படுத்தினார். தமிழ்த்தேசிய அடையாளத்தை கருத்து நிலையில் மட்டுமன்றி அறிவார்ந்த இயக்க நிலையிலும் முன்னெடுத்த பெரும் கல்விமானாகவும் சமூக வினைப்பாட்டாளராகவும் விளங்கினார்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனது மேற்கூறிய பன்முக பரிமாணங்களையும், அவரது வாழ்வின் உன்னதங்களையும், ஆவணப்படுத்தும் தொகுப் பாக நூற்றாண்டு விழா மலர் அமைந்துள்ளது.




எழுத்தளிக்கை செய்து அகவய நிலையிலும் புறவய நிலையிலும் பேராசிரியரின் ஆளுமையினை நோக்கியுள்ளனர். அவரது குடும்பத்தினருக்கும் மாணவருக்கும் தமிழ் சமூகத்துக்கும் நிறைவு தரும் தொகுப்பாக நூற்றாண்டு விழா மலர் அமைந்துள்ளது.

பயனுள்ள பல தகவல்கள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளன. உயர்நிலையான ஓர் ஆளுமை வடிவினரை கண்டறியும் படைப்புக்கள் பனுவலை நிறைவு செய்துள்ளவரும் தமிழ் சமூகத்திற்கும் தமிழ் புலமைக்கும் கனதியான செய்தியைத் தரும் ஆக்கமாக நூற்றாண்டு விழா மலர் அமைந்துள்ளது.

நவீன அச்சுக்கலை நுட்பங்களுடன் மலர் வடிவமைக்கப்பட்டுள்ளமை பிறிதொரு சிறப்பு அந்த பெரிய மலரை இலவசமாக வழங்க அவரது குடும்பத்தினர் மேற்கொண்ட முயற்சி பாராட்டுக்குரியது.

**தகை சார் வாழ்நாள் பேராசிரியர்**
**சபா.ஜெயராசா**

# டெங்கு அபாய வலயங்களாக 5 மாவட்டங்கள் அறிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 5 மாவட்டங்களின் 29 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாயமிக்க வலயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்கள் டெங்கு அபாயமிக்க மாவட்டங்களாக அடையாளம் காணப் பட்டுள்ளது.

நாட்டில் இவ்வருடத்தின் இதுவரையான காலப் பகுதிக்குள் 36,552 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 15,120 ஆகும்.

இதனால் பொதுமக்கள் அனைவரும் தங்களது சுற்றுச் சூழலைச் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் வைத்திருக்குமாறு தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி)

# தேர்தல் விஞ்ஞாபனத்தை இலவசமாக விநியோகிக்க வாய்ப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வாக்காளர்களுக்கு இலவசமாக அஞ்சல் மூலம் விநியோகிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தின்படி வேட்பாளர் ஒருவர் இத்தகைய தேர்தல் விஞ்ஞாபனம் அல்லது கொள்கை அறிக்கையை வாக்காளர்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் வாக்காளருக்கு ஒரேயொரு விஞ்ஞாபனத்தினை மாத்திரமே விநியோகிக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் இன்றைய தினம் அஞ்சல் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 250 | 220 | 300 |
| உருளைக்கிழங்கு | 160 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 200 | 280 |
| தக்காளி | 250 | 250 | 220 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 170 | 200 |
| கோவா | 200 | 300 | 350 | 400 |
| கரட் | 300 | 320 | 300 | 300 |
| பூசணி | 80 | 140 | 80 | 80 |
| புடோல் | 70 | 120 | 100 | 120 |
| வாழைக்காய் | 200 | 250 | 200 | 240 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | 230 | 280 |
| பாகற்காய் | 300 | 350 | 250 | 300 |
| வெண்டக்காய் | 70 | 80 | 70 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 240 |
| பயற்றங்காய் | 150 | 200 | 120 | 150 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 350 |
| பீற்றூட் | 100 | 120 | 150 | 150 |
| கறிமிளகாய் | 350 | 600 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 200 | 150 |
| போஞ்சி | 300 | 550 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 220 | 250 |
| கீரை - 1 பிடி | 120 | 120 | 80 | 100 |
| தேசிக்காய் | 400 | 300 | 450 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 130 | 130 | 120 | 100-130 |
| இராசவள்ளி | -- | 350 | 650 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 450 | 350 |
| முள்ளங்கி | 120 | 120 | 120 | 160 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 50 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 60 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித் பிரேமதாசவின் ஆட்சியில்
# வடக்கையும் தெற்கையும்
# விளையாட்டின் மூலம் இணைப்போம்
### ஐ.ம.ச காரியாலய திறப்பு விழாவில் அர்ஜுன ரணதுங்க

(சாவகச்சேரி)

எதிர்காலத்தில் மலரவுள்ள சஜித் பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு மாகாணத்தையும் தெற்கையும் விளையாட்டுத்துறையின் ஊடாக இணைக்கின்ற ஓர் வேலைத்திட்டத்தினை முன்னெடுக்கவிருப்பதாக இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் காரியாலயத் திறப்பு விழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்றிருந்த நிலையில் அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், நாம் இப்போது மிகவும் தீர்மானம் மிக்க தேர்தல் ஒன்றை நோக்கி நகர்ந்து செல்கிறோம்.

இந்தத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி பலம் வாய்ந்த இடத்தில் உள்ளது.

சிறந்த தலைமைத்துவத்திற்கான வேலைத்திட்டம் அவரிடம் உள்ளது.

அதனால்தான் அவரோடு இணைந்து இந்த அரசியல் பயணத்தில் இணைந்துள்ளேன்.

வட மாகாண விளையாட்டு வீரர்கள் தேசிய மட்டத்திற்குச் செல்வது மிகக் குறைவு. வடக்கு மாகாண விளையாட்டுத் துறையை மேம்படுத்தி வடக்கு மாகாண விளையாட்டு வீரர்களுடைய திறன்களை வளர்ப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

இதற்காக வேலைத்திட்டங்களை சஜித் பிரேமதாசவின் தலைமையின் கீழ் முன்னெடுப்போம் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (நி-30)



மன்னார் கொமர்ஷல் வங்கியின் நிதி அனுசரணையில் மன்னார் கருங்கண்டல் பாடசாலையில் கல்வி முன்னேற்றத்துக்கு என நவீன வசதிகள் கொண்ட கணனி ஆய்வு கூடம் வழங்கி வைக்கப்பட்டது. (படம்: யோசப்நயன்)



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 05.08.2024 திங்கட்கிழமை அன்று சிவபதப்பேறு அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர்.
**சின்னத்தம்பி கணேசமூர்த்தி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 02.09.2024 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய கிரியைகள் எதிர்வரும் 04.09.2024 புதன்கிழமை முற்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)



தோற்றம் மறைவு
06.12.1948 05.08.2024

டச்சு வீதி,
உடுவில்.

(c-1099)

தகவல்
குடும்பத்தினர்


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## பதநீர்



யாழ்ப்பாண மண்ணின் கற்பகத் தருவாம் பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதநீர் மருத்துவக் குணங்கள் நிறைந்தது.

**"செப்பிதன் பதநீர் வெம்மை தீர்த்திடு**
**நுங்கருத்தில் வெப்பு நாவறட்சி பித்தம்**
**விலகிடும் குளிர்ச் சியுண்டாம்**
**உப்பிச முறும் பழத் தையுண்டிடி லுடல் கணக்கும்"**

உடலில் அதிகரித்த உஷ்ணத்தை நீக்கி உடலிற்கு ஒரு பேசாக்கு உணவாகவும் அமைந்து விடுகிறது.

பதநீரை கருப்பனீர் எனவும் கூறுவர் பனை மரத்தின் பாளை களைச் சீவி, நுனியில் வடி யும் நீரை, சுண்ணாம்பு தடவி மண் பானைகள் மூலம் சேகரிப்பார்கள். இனிப்புச் சுவையுடன் கூடிய இந்தத் திரவமே பதநீர்.

இனிப்புச் சுவையுடன் கூடிய இந்தத் திரவம் உடலிற்கு உடன் சக்தியைக் கொடுக்கக் கூடியது.

உடல் மெலிந்தவர்கட்கு சிறந்த ஊக்கம் தரும் பானம் இது நீர்க்கடுப்பு, சிறுநீர் வெளி யேறும் பாதையில் ஏற்படும். வலி போன்றவற்றை குண மாக்கும்.

இதிலடங்கியுள்ள சில வேதியற் சத்துக்கள் தாப மகற்றி (ஆன்டிஇன்ஃபின மேற்டரி) குணங்கள் கொண்டவை. அவை உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைத்து நல்ல ஆரோக்கியம் தரக்கூடியது.

பதநீரிலுள்ள கல்சியம் மற் றும் மக்னீசியம் போன்ற கனி யச் சத்துக்கள் எலும்புகளுக்கு வலுவும் ஆரோக்கியமும் தரு கின்றது. இதிலடங்கியுள்ள விற்றமின்கள் மற்றும் எதிர் ஒட்சியேற்ற காரணிகள் தோலிற்கு ஆரோக்கியமும் இயற்கையான பளபளப்பும் தருவதோடு வயதான தோற்றம் வருவதையும் தடுக் கின்றது. இதிலுள்ள உயிர்ச் சத்து "C" நோய் எதிர்ப்பு சக் தியை அதிகரிக்கின்றது.

நாட்பட்ட வியாதிகள் வாராமல் உடலைப் பாது காக்கின் றது. இதிலுள்ள நார்ச்சத்துக்கள் செரிமானம் சிறப்பாக நடைபெற உதவுகின்றது.

மலச்சிக்கலை நீக்குகின் றது. மேலும் இதிலுள்ள பொட் டாசியம் போன்ற கனிமச் சத்துகளில் உள்ள எலக்ரோ லைட்கள் உடலை நீரேற்றத் துடன் வைக்க உதவி புரிகின் றது. தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வர பெண்களுக்கு ஏற் படும் வெள்ளை சாய்தல் நோயைத் தணிக்கும்.

### பதநீர் கஞ்சி

தேவையானவை-பதநீர், தேங்காய்ப்பூ, சிவத்த பச்சை அரிசி, ஏலம்.

அரிசியை நனைய விட்டு வடித்து அரவல் நொருவலாக அரைத்து பயறையும் ஊற வைத்து பதநீரைக் கொதிக்க வைத்து, நன்றாக கொதித் ததும் தேங்காய்ப்பாலில் கரைத்த மாவை சேர்த்து கலந்து ஏலப் பொடியையும் போட்டு சிறிது உப்பும் சேர்த்து கஞ்சிப்பதத்தில் இறக்கி இளஞ் சூடாக இருக்கும் போது அருந்தலாம்.

எமது உணவுக் கால்வாய் தொகுதியை சீராக செயற் படுவதற்கு சிறந்தது. உடலிற்கு குளிர்ச்சியையும் கொடுக்கக் கூடியது. இதில் அதிகளவு கல்சியம் சத்து இருப்பதாலும் என்பு தேய் மானம் மற்றும் எலும்பு தொடர்பான நோய்கள் வராமல் பாதுகாக்கும் ஆற்றலும் உண்டு. பதநீரை, பழைய கஞ்சி யுடன் சேர்த்து புளிக்க வைத்து ஆறாத புண்கள், கொப்புளங்கள் மீது தடவி வந்தால் குணம்கிடைக்கும்.

தொடர்ந்து பதநீர் குடித்து வந்தால் மலச் சிக்கல் பிரச்சினை தீரும். இது கழிவு அகற்றியாகவும், வியர்வை நீக்கியாகவும் தொழிற்படக் கூடியது. வயிறு தொடர்பான பிரச்சினைகளை கட்டுப்படுத்தும் பாரம்பரிய உணவான பதநீரிலிருந்து பாயாசம், களி போன்றனவும் தயாரிக்கலாம்.250 மி.லீ பதநீரில், காபோவைதரேற்று -26.8 கிராம், இரும்புச் சத்து -5.5 மி.கிராம், கல்சியம்- 35.5 மி.கிராம், பொஸ்பரஸ்-32.4 மி.கிராம், தயமின் -82.3 மி .கிராம், ரைபோபிளேவின்-44.4 மி. கிராம்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

உயிர்ச்சத்து 'C'-12.2 மி. கிராம், நிக்கொற் திணிக் கமிலம்- 674.4 மி. கிராம். அதிகாலையில் பதநீர் அருந்தினால் நல்ல மருத்துவ குணங்கள் கிடைக்கும்.

அம்மை கொப்பளங்களை ஆற்றக் கூடியது. நுங்கை சீவி பதநீரில் கலந்து தொடர்ந்து 48 நாட்கள் குடித்து வர குடற் புண்ணை ஆற்றும்.

உடற்சோர்வை நீக்கி உட லிற்கு புத் துணர்வை கொடுக்கக்கூடிய இயற்கைப் பணாமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்கியின்** | பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர்

569





அங்கேயெல்லாம் போக விரும்புகிறேன். இன்னும் அப்பால் போனால் கடுங்குளிர் காரணமாகக் கடல் நீர் உறைந்து கெட்டிப் பட்டு மனிதர்களும் மிருகங்களும் நடந்து போகும்படியிருக்குமாம். பறக்கும் குதிரை மேல் ஏறிச்சென்று அந்த இடங்களைப் பார்க்க விரும்புகிறேன்."

"தேவி! என்னால் அத்தகைய பறக்கும் குதிரையைத் தங்களுக்கு கொண்டு வந்து தர முடியாது. ஆனால் தாங்கள் கூறிய சில இடங்களுக்குப் போகச் சுலபமான வழி இருக்கிறது. ஒரு நல்ல படகிலே ஏறினால் அரை நாளில் இலங்கைக்குப் போகலாம். கப்பல் ஏறிச் சென்றால்.

"ஐயா! அந்த வழி எனக்குத் தெரியாத வழி அல்ல. ஆனால் எனக்குக் கடலைக் கண்டால் பயம். கப்பலிலே ஏறுவதென்றால் பயம். நதியைப் படகில் ஏறிக்கடக்கும்போது படகு அசைந்தால் கூடப் பயம். ஆகையால் உம்முடைய யோசனை எனக்குச் சிறிதும் பயன்படாது. நீர் போய் வரலாம்!" என்று கூறி நந்தினி எழுந்தாள்.

"தேவி! வேறொன்றும் தாங்கள் என்னிடம் சொல்வதற்கு இல்லையா?" இல்லை! நீர் ஏதோ சொல்ல விரும்புவது போல் காண்கிறது."

"ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். அதற்கு மட்டும் விடை சொல்ல வேண்டும். சில நாளைக்கு முன்பு தாங்கள் இலங்கைக்கு வந்திருக்கவில்லையா? அநுராதபுரத்தின் வீதிகளில் இருண்ட நிழலில் தனியாக நின்றிருக்கவில்லையா?"

இல்லவே இல்லை. பழுவேட்டரையரின் அரண்மனையையும் காவலையும் தாண்டி நான் ஒரு பொழுதும் அப்பால் சென்றதே இல்லை. உமக்கு ஏன் அத்தகைய சந்தேகம் உதித்தது?

அம்மணி! இலங்கையில் சில தினங்களுக்கு முன்பு தங்களைப் பார்த்தேன். பறக்கும் குதிரை என்றெல்லாம் சொல்லுகிறீர்களே? ஒரு வேளை உண்மையில் அத்தகைய குதிரை தங்களிடம் இருக்கிறதோ, அதில் ஏறி அங்கு வந்தீர்களோ என்று நினைத்தேன்.

ஆனால் இப்போது போல் ஆடை ஆபரணங்கள் புனைந்து அலங்காரமாக இருக்கவில்லை. சாதாரண சேலை ஒன்று மட்டும் உடுத்தி ஒருவித ஆபரணமும் புனையாமல் கூந்தலை விரித்துப் போட்டுக்கொண்டு நின்றீர்கள். அந்த ஸ்திரீ தாங்கள் அல்லவா?"

"இல்லை நான் இல்லை ஐயா! நீர் கூறும் அந்த ஸ்திரீ வாய் திறந்து ஏதாவது பேசினாளா?"

இல்லை ஜாடையினாலே தான் பேசினாள். ஆனால் தங்களுக்கு மந்திரவாதிகளுடன் பழக்கம் இருக்கிறது. ஒருவேளை அத்தகைய மந்திரசக்தியினால் தங்களுடைய சூட்சும வடிவம் அங்கே வந்திருக்கலாம் அல்லவா?"

"நானோ, என்னுடைய சூட்சும சரீரமோ இல்லை என்றால்?" "தங்களை வடிவத்தில் மிகவும் ஒத்தவளாய், பேச முடியாத ஸ்திரீயாக அவள் இருக்க வேண்டும்."

நந்தினியின் பார்வை எங்கேயோ வெகு தூரத்தில் சென்றிருந்தது. ஒரு நெடிய பெருமூச்சு விட்டாள்.

"ஐயா! சற்று முன்னால் எனக்கு ஏதேனும் உதவி செய்ய விரும்புவதாகச் சொன்னீர் அல்லவா?" ஆம்!

"அது தாங்கள் உண்மையாகச் சொன்ன வார்த்தை தானே?" "சந்தேகமில்லை." "அப்படியானால் இதைக் கேளும். எப்போதாவது ஒரு சமயம் மறுபடியும் அந்த ஸ்திரீயைப் பார்க்க நேர்ந்தால் அவளை எப்படியாவது பிடித்துக் கொண்டு வந்து என்னிடம் சேர்ப்பியும். அது முடியாவிட்டால் என்னையாவது அவளிடம் அழைத்துக் கொண்டு செல்லும்!" என்றாள் நந்தினி.

அரை நாழிகைக்கெல்லாம் வந்தியத்தேவன் மறுபடியும் முல்லையாற்றங்கரையில் நின்றான். அவனுடைய குதிரையும் பக்கத்தில் நின்றது. அவனை அங்கே அழைத்து வந்தவர்கள் ஒரு நொடியில் மறைந்துவிட்டார்கள். தேவராளனைக் கூடக் காணவே இல்லை.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## நன்றி இல்லாதவன்

(நேற்றைய தொடர்ச்சி...)

ஏ சிங்க ராஜனே! நன்மையோ தீமையோ நான் அவனுக்கு வாக்குக் கொடுத்து விட்டேன். அதனால், அவனுக்குத் தீங்கு செய்ய மாட்டேன் என்று மறுத்து விட்டது கரடி.

தன் தந்திரம் பலிக்காமல் போகவே சிங்கம் அமைதியாகி விட்டது.

இளவரசன் கண் விழித்தான். சிங்கத்திற்கும் தனக்கும் நடந்த உரையாடலை அவனிடம் கூறி விட்டு கரடி கண் அயர்ந்தது.

கரடியிடம் தன் தந்திரம் பலிக்காமல் ஏமாந்து போன சிங்கம் இளவரசனிடம் முயன்றது.

எனக்குப் பயந்து நீ மரத்தில் ஏறிவிட்டாய். ஆனால், கரடியிடம் இருந்து தப்ப முடியாது. நான் போனபின் கரடி உன்னைக் கொன்றுவிடும். நீ உயிர் பிழைக்க வேண்டுமானால் கரடியைக் கீழே தள்ளிவிடு என்று நயவஞ்சகமாகக் கூறியது சிங்கம்.

அது சொன்னதை நம்பி தன் உயிரே தனக்குப் பெரிது என்று எண்ணி, கரடியைக் கீழே தள்ள முற்பட்டான் இளவரசன்.

அரைகுறைத் தூக்கத்தில் இருந்த கரடி, மற்றொரு கிளையைப் பிடித்துக் கொண்டு கீழே விழாமல் தப்பித்துக் கொண்டது.

இளவரசனின் நம்பிக்கைத் துரோகத்தைக் கண்டு கரடி வருந்தியது.

அடே துரோகி! நட்பு எத்தகையது என்பதை உணராமல் கலக்கமுற்று, துரோகம் செய்ய முற்பட்டு விட்டாய். அதனால், உன் புத்தியும் அடியோடு கலங்கி அலைவாய் என்று சபித்தது கரடி

இளவரசனின் மனச்சாட்சி உறுத்தியது. பைத்தியம் பிடித்தவனைப் போல் ஆனான்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும். ~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விருப்பு அடிப்படையில் வாக்களிப்பதை அறியுங்கள்

ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

தென்பகுதியில் வேகம் கொண்ட தேர்தல் தாழமுக்கம் வடக்குக் கிழக்கிலும் காற்றழுத்த தாழமுக்கமாகியுள்ளது.

ஆம், ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தேர்தல் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அதேநேரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையில் தனது தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளார்.

தவிர, ஏலவே அவர் யாழ்ப்பாணத்துக்கும் வந்து சென்றுள்ளார்.

இன்னும் ஒரு சில தினங்களில் அநுர குமார திஸாநாயக்கவின் தேர்தல் பரப்புரை வடக்குக் கிழக்கை நோக்கி வேகமெடுக்கவுள்ளது.

இந்நிலையில் 2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் கடந்தகால ஜனாதிபதித் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது மிகவும் போட்டி நிறைந்ததாக இருக்கும் என அனுமானிக்க முடியும்.

ஆம், பொதுவில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஆகக் குறைந்தது 51 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.

அவ்வாறு 51 சதவீத வாக்குகளைப் பெறாத சந்தர்ப்பத்தில், இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணப்படும்.

இஃது ஜனாதிபதித் தேர்தலுக்கான விதிமுறையாக இருந்தபோதிலும் கடந்த காலங்களில் நடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணுதல் என்ற தேவை ஏற்பட்டிருக்கவில்லை.

இதன் காரணமாகக் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர்கள் புள்ளடியிடுவதன் மூலம் தமது வாக்குரிமையை நிறைவேற்றிக் கொண்டனர்.

ஆனால் 2024ஆம் ஆண்டு நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க, நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட 38 பேர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதில் ரணில், சஜித், அநுர ஆகிய மூவருக்கும் இடையில் கடும் போட்டி நிலவும் என்பது தேர்தல் நோக்கர்களின் கருத்து.

அதாவது, இம்முறை நடைபெறுகின்ற ஜனாதிபதித் தேர்தலில் எவரும் 51 சதவீத வாக்குகளைப் பெற முடியாத நிலைமை ஏற்படும் என எதிர்வுகூறப்படுகிறது.

இவ்வாறான சூழ்நிலையில் இரண்டாவது விருப்பு வாக்கு எண்ணுகின்ற அவசியம் ஏற்படும்.

அவ்வாறு இரண்டாவது விருப்பு வாக்கை எண்ணுகின்ற தேவை ஏற்படும்போது, அதற்கேற்றவாறு வாக்காளர்கள் வாக்களிப்பது அவசியமாகிறது.

எனவே இதுகாறும் ஜனாதிபதி வேட்பாளருக்குப் புள்ளடியிடுவதனூடு வாக்களிப்பை நிறைவேற்றிய வாக்காளப் பெருமக்கள்; இம்முறை முதலாம், இரண்டாம் விருப்பு வாக்குகளை வழங்குகின்ற முறைமையை பிரயோகிக்க வேண்டியவர்களாக உள்ளனர்.

இங்குதான் வாக்களிப்பது எப்படி என்பதை அறிந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

ஆம், நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு விருப்பு வாக்குகளை அளிப்பது என்பது பற்றி வாக்காளர்களுக்கு தெளிவூட்டுவது அவசியம்.

அதேநேரம் வாக்காளர்களும் வாக்களிப்பு முறையை முன்கூட்டியே அறிந்து கொண்டு செயலாற்ற வேண்டும்.

அப்போதுதான் செல்லுபடியற்ற வாக்குகளைக் கணிசமாகக் குறைக்க முடியும் என்பதுடன் ஜனநாயகம் வெற்றி பெறுவதற்கும் உதவுவதாக இருக்கும்.

# வரவு செலவுத் திட்டத்துக்கு ஐ.எம்.எப் நிதியுதவி வழங்கும்

(கொழும்பு)

ஜனாதிபதியும் நிதி, அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவால் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த சர்வதேச நாணய நிதியத்துடன் கடந்த 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி, செய்து கொள்ளப்பட்ட பணியாளர் மட்டத்திலான விரிவான கடன் ஒப்பந்தத்துக்கமைய எதிர்வரும் 2025ஆம், 2026ஆம், 2027ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவுத் திட்டத்துக்கு என 1,900 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இன்னும் 4 மாதங்களுக்குப் பின்னர் 2025ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கத்தின் வரவு, செலவுத்திட்ட ஆவணம் தயாரிக்கப்படும் போது, 700 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கத் தீர்மானித்துள்ளது.

மேலும் 2026ஆம் ஆண்டிலும் 2027ஆம் ஆண்டிலும் தலா 600 மில்லியன் அமெரிக்க டொலர் வீதம் வழங்கவும் இந்த உடன்படிக்கையின் ஊடாக உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களினுடைய தேர்தல் விஞ்ஞாபனங்களில் என்ன விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களைப் பின்பற்றாவிட்டால், இலங்கை அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொள்ளநேரிடுமென்று அரசாங்க நிதித்துறை ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# இராணுவத்தினருக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளையும் நிராகரிக்கிறோம்

## ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர

இராணுவத்தினருக்கு எதிராக சர்வதேச அரங்கில் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் அனைத்தையும் நிராகரிக்கிறோம்.

இராணுவத்தினர் மீது சுமத்தப்படும் பொய்யான குற்றச்சாட்டுக்களை முடிவுக்குக் கொண்டு வர உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும் என சர்வஜன சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள சம்புத்த ஜயந்தி கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

30 வருட கால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்திய இராணுவத்தினர் நிம்மதியில்லாமல் இருக்கிறார்கள். நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்ததால் தான் அரசியல்வாதிகள் இன்று சுதந்திரமாக மேடைபோட்டு தேர்தல் பிரசாரம் செய்கிறார்கள்.

இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் அரசியல் நோக்குடையவை. முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஏதும் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

ஆகவே இராணுவத்தினர் மீது முன்வைக்கப்பட்டுள்ள் குற்றச்சாட்டுக்களை முடிவுக்கு கொண்டு வர வேண்டுமாயின் உண்மையை கண்டறியும் ஆணைக்குழுவை ஸ்தாபிக்க வேண்டும்.

இராணுவத்தினர் இன்று கௌரவமாக வாழவில்லை. பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளார்கள். அரசியலமைப்பின் ஊடாக முப்படையினரது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்போம்.

இராணுவத்தினரின் உரிமைகளைப் பாதுகாக்க அனைத்து அரசியல் தரப்பினரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். தபால்மூல வாக்களிப்புக்கு தகுதிபெற்றுள்ள இராணுவத்தினர் நாட்டின் பாதுகாப்பு மற்றும் கௌரவம் ஆகியவற்றை கருத்திற்கொண்டு அரசியல் தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்றார். (ந-7)

# அரச வைத்தியசாலைகளில் தரமற்ற மருந்துகள் ஏதுமில்லை

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் தரமற்ற மருந்துகள் எதுவுமில்லையென சுகாதார அமைச்சர் டாக்டர் ரமேஷ்பத்திரன தெரிவித்துள்ளார்.

தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்தில் எந்த வகையிலும் இடமில்லையெனவும், அரசாங்க வைத்தியசாலைகளினால் வழங்கப்படும் மருந்துகளை நோயாளிகள் அச்சமின்றிப் பயன்படுத்த முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மருந்துகள் தொடர்பிலான விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போதைய சுகாதாரத்துறை தொடர்பாகவும் மருந்துகள் கொள்வனவு தொடர்பாகவும் ஊடகங்களில் பல தவறான மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் பரப்பப்பட்டு வருவது தொடர்பில் விடயங்களை தெளிவுபடுத்துவதற்காக இந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

சுகாதார அமைச்சு மருந்துகளை திடீரென கொள்வனவு செய்வதில்லை. தரத்தில் குறைந்த எந்த மருந்து வகைகளும் கொள்வனவு செய்யப்படுவதில்லை என்று தெரிவித்த அமைச்சர், இலங்கையில் பதிவு செய்யப்படாத மருந்துகள் எந்த சூழ்நிலையிலும் நாட்டுக்குள் கொண்டு வர அனுமதிக்கப்படுவதில்லை என்றும் கூறினார். (ந-7)

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று கொடியேற்றம்

(துன்னாலை)

வடமராட்சி அருள்மிகு வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று காலை 9.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 16.09 திங்கட்கிழமை அன்று தேர்த் திருவிழாவும் மறுநாள் சமுத்திரத் தீர்த்தத் திருவிழாவும் 17 ம் திருவிழாவாக கேணித்தீர்த்தமும் இடம்பெறவுள்ளது. (ந-7)

# வாக்குச்சீட்டு விநியோகம் நாளை முதல் ஆரம்பம்

## தபால் திணைக்களம்

(கொழும்பு)

நாளை முதல் உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டு விநியோக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனை முன்னிட்டு சுமார் 8000 பேரை பணியில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாக சிரேஷ்ட பிரதி தபால்மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்தார்.

இன்று தபால் ஊழியர்கள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகங்களுக்கு சென்று வாக்குச்சீட்டுக்கள் அடங்கிய பொதிகளை தபால் அலுவலகங்களுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சில நாடுகளின் சமஷ்டி அரசியல் முறைமையும் இலங்கையின் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தமும் ஒரு பார்வை



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

03

4. உள்ளூராட்சி நிறுவனங்கள் மத்திய அரசின் நிர்வாக முகவர்கள் மட்டுமே ஆகும். பிராந்திய அரசுகளுக்கு மத்திய அரசுகளிடமிருந்து ஒப்பீட்டளவிலான சுதந்திரம் உண்டு.

5. அரசியலமைப்பு இசைந்து கொடுக்காதிருத்தல் அத்தியாவசியமானதல்ல. அரசியலமைப்பு இசைந்து கொடுக்காதிருத்தல் அல்லது ஒப்பீட்டளவில் இசைந்து கொடுக்காதிருத்தல் அத்தியாவசியமாகின்றது

6. இறைமை மத்திய அரசிலேயே நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது இறைமை மத்திய அரசுக்கும் பிராந்திய அரசுகளுக்கும் இடையே பகிர்ந்து கொள்ளலாம்.

இலங்கையை விடச்சிறிய நாடான சுவிற்லாந்தில் இருபத்தைந்துக்கும் அதிகமான கன்டன்கள் உள்ளன. ஒரு சில கன்டன்கள் எமது நகரசபை மற்றும் பிரதேச சபையின் ஆளுகைப் பிரதேசத்தைக் கொண்டிருக்கலாமென்ற போதிலும் அவற்றுக்குக் குறிப்பிடத்தக்க அளவு அதிகாரங்களும் சுதந்திரமும் உள்ளன.

அடுத்ததாக இந்தியாவின் அரசியலமைப்பு முறைமை பற்றி பார்க்குமுன் இந்தியாவின் மாநிலங்கள் எவ்வாறு உருவாகின எனப் பார்ப்போம்.

### இந்திய மாநிலங்களின் உருவாக்கம்

தற்போதைய இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், பூட்டான் ஆகிய நாடுகளை உள்ளடக்கியிருந்த பிரித்தானிய இந்தியா இரண்டு விதமான துணை அரசியல் அலகுகளைக் கொண்டிருந்தது. மாகாணங்கள், ஆளுநர் அல்லது சிறப்பு ஆணையர் தரத்திலுள்ள பிரித்தானிய அதிகாரிகளால் நேரடியாக ஆளப்பட்டன.

ஜம்மு காஸ்மீர் இராச்சியம், ஐதராபாத் இராச்சியம் போன்ற 526 சமஸ்தானங்கள், பிரித்தானியரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்ட உள்ளூர் பரம்பரை ஆட்சியாளர்களால் ஆளப்பட்டு வந்தன. பிரித்தானிய இந்தியா 15 மாகாணங்களைக் கொண்டிருந்தது: அச்சுமேர்-மேர்வாரா, அசாம், பலூசித்தான், வங்காள மாகாணம், பிகார் மாநிலம், பம்பாய், மத்திய மாகாணம், கூர்க், தில்லி, மதராசு, வடமேற்கு எல்லை, ஒரிசா, பஞ்சாப், சிந்து, மற்றும் ஐக்கிய மாகாணங்கள் என்பனவாகும்.

பிரித்தானிய இந்தியாவில், பல்வேறு அளவுகளில் பல சமஸ்தானங்களும் இருந்தன. இவற்றுள், ஒரு கோடிக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்ட ஐதராபாத் தொடக்கம், மிகச் சிறிய சமஸ்தானங்கள் வரை அடங்கி இருந்தன. இவற்றை விட வேறு இரு ஐரோப்பிய நாடுகளும் இந்தியாவில் சில நிலப்பகுதிகளை ஆண்டு வந்தன.

போர்த்துக்கேய இந்தியா, கோவா, தமனும் தியுவும், தட்ராவும் நாகர் அவேலியும் ஆகிய கரையோரப் நிலப்பகுதிகளையும், பிரெஞ்சு இந்தியா, சண்டர்நகர், ஏனாம், பாண்டிச்சேரி, காரைக்கால், மாகே ஆகிய ஐந்து நிலப்பகுதிகளையும் உள்ள டக்கியிருந்தன.

1947இல் இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது, மேற்படி மாகாணங்களும், சமஸ்தானங்களும், இரு நாடுகளுக்கும் இடையே பங்கிடப்பட்டன. பஞ்சாப், வங்காளம் ஆகிய இரண்டும் மட்டும், சமய அடிப்படையில் பிரித்து வழங்கப்பட்டன.

ஐதராபாத்தின் இஸ்லாமிய ஆட்சியாளர் சுதந்திரமாக இருக்க முயன்றார் என்றாலும் இந்தியப் படை தலையிட்டு அதனை இந்தியாவுடன் இணைத்தது. ஜம்மு காஸ்மீருக்கு இரு நாடுகளுமே உரிமை கோரின. பெரும்பான்மை மக்கள் இஸ்லாமியர்களாக இருந்தார்கள். இந்துவாக இருந்த ஜம்மு காஸ்மீரின் ஆட்சியாளர் நாட்டை இந்தியாவுடன் இணைத்தார்.

1950இல், இந்திய அரசியல் சட்டம் நடப்புக்கு வந்ததுடன், பலவகையான மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. முன்னர் மாகாணங்களாயிருந்தவை மாநிலங்கள் ஆக்கப்பட்டு ஆளுநராலும், தெரிவு செய்யப்பட்ட சட்டசபையாலும் ஆளப்பட்டன. இந்தப் பிரிவில் அடங்கிய ஒன்பது மாநிலங்களாவன, அசாம், மேற்கு வங்காளம், பிகார், பம்பாய் மாகாணம், மத்தியப் பிரதேசம் (முன்னர் மத்திய மாகாணங்களும், பெராரும்), மதராஸ், ஒரிசா, பஞ்சாப், உத்தரப் பிரதேசம் (முன்னாள் ஐக்கிய மாகாணங்கள்) ஆகும்

சென்னை மாகாணத்திலிருந்து தெலுங்கு பேசும் பகுதிகளை பிரித்து தனியாக ஆந்திர மாநிலம் உருவாக்கப்படவேண்டும் என மக்கள் மத்தியில் கோரிக்கை எழுந்தது. இந்த கோரிக்கையின் ஒருபகுதியாக பொட்டி சிறீராமலு என்பவர் 58 நாட்கள் உண்ணாவிரதமிருந்து உயிர்துறந்தார். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க 1953 ஒக்டோபர் 01 ஆம் நாள் ஆந்திரம் தனி மாநிலமாக உருவாக்கப்பட்டது.

அதே ஆண்டில் பாசல் அலி என்பவரைத் தலைவராகவும் பணிக்கர், குன்சுரு போன்ற உறுப்பினர்களைக் கொண்ட மாநில மறுசீரமைப்பு ஆணையத்தின் பரிந்துரைகளின் படி 1956இல் மாநில மறுசீரமைப்புச் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டப்படி மொழியை அடிப்படையாகக் கொண்டு இந்தியாவில் 14 மாநிலங்கள் நிறுவப்பட்டது.

இதே அடிப்படையில் மகாராஷ்டிராவில் இருந்து குஜராத் (1960) பிரிக்கப்பட்டது. பின்னர் வந்த ஆண்டுகளில் மேலும் பல மாநிலங்கள் உருவாயின. 1963 இல் நாகலாந்து, 1966 இல் அரியானா, 1971 இல் இமாச்சலப் பிரதேசம், 1972 இல் திரிபுரா, மேகலா மற்றும் மணிப்பூர், 1975 இல் சிக்கிம், 1987 இல் மிசோரம், அருணாச்சலப் பிரதேசம் மற்றும் கோவா ஆகிய மாநிலங்கள் உருவாக்கப்பட்டன.

2000ஆம் ஆண்டில் சத்தீஸ்கர், உத்தராகண்டம் மற்றும் சார்க்கண்டு என மேலும் மூன்று மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. 2014 ஆவது ஆண்டில் ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து உருவாக்கப்பட்ட தெலுங்கானா மாநிலம் இந்தியாவின் 29 ஆவது மாநிலமாகும்.

5 ஒகஸ்ட் 2019 அன்று, இந்திய பாராளுமன்றத்தில் ஜம்மு காஸ்மீர் மறுசீரமைப்புச் சட்டம் 2019 நிறைவேற்றப்பட்டது. அதன்படி ஜம்மு காஸ்மீர் மாநிலத்தைப் பிரித்து ஜம்மு காஸ்மீர் மற்றும் லடாக் என இரு ஒன்றியப் பகுதிகளை 31 ஒக்டோபர் 2019 முதல் நிறுவப்பட்டது. எனவே தற்போது மாநிலங்களின் எண்ணிக்கை 28 ஆக குறைந்தது. ஒன்றியங்களின் எண்ணிக்கை 9 ஆக உயர்ந்தது.

### இந்தியாவின் அரைகுறை சமஷ்டி அரசியலமைப்புப் பற்றி........

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு ஒன்று கூறுவது: "இந்தியா அல்லது பாரதம் பல மாநிலங்களின் ஒன்றமைப்பாகும்".

இந்தியாவில் மத்தியில் ஒன்றிய அரசும் மாநிலத்தில் மாநில அரசுகளுமாக இரண்டு அரசு இருக்கும் கூட்டாட்சி (federal system) நடைமுறையில் உள்ளது.

ஒன்றிய அரசும் மாநில அரசும் அதிகாரத்தையும் அவ்வதிகாரத்தைச் செயற்படுத்துவதற்கான வளத்தையும் பகிர்ந்து கொள்ளும். ஒரு சில அதிகாரங்களை இரண்டும் கூட்டாகச் சேர்ந்து செயற்படுத்துகிறது.

### கூட்டாட்சி முறையின் அம்சங்கள்:

- இரட்டை அரசாங்க முறை
- அதிகாரப் பகிர்வு
- அரசியலமைப்பின் ஒப்புயர்வற்ற தன்மை
- எழுத்துவடிவத்தில் அரசியலமைப்பு
- நெகிழ்வற்ற அரசியலமைப்பு
- நீதிமன்றங்களின் அதிகாரம் ஆகும்.

இரட்டை அரசாங்க முறை என்பது ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு இரண்டு அரசுகளைக் கொண்டுள்ளது ஆகும். அவை மைய அரசு மற்றும் மாநில அரசு ஆகும்.

அதிகாரப் பகிர்வு என்பது தேசிய அளவில் முக்கியமான துறைகளின் அதிகாரம் மைய அரசுக்கும், மாநில அளவில் முக்கியமான துறைகளின் அதிகாரம் மாநில அரசிற்கும் பகிர்ந்தளிக்கப்படும். யாருக்கு எந்த அதிகாரம் என்பதை அரசியலமைப்புச் சட்டம் வரையறை செய்யும்.

அரசியலமைப்பின் ஒப்புயர்வற்ற தன்மை என்பது ஒரு கூட்டாட்சி அரசு உருவாவதற்கு நிலைபெற்ற (Existence) அரசியலமைப்பே அடிப்படையாகும். அரசியலமைப்பின் பின்புலத்திலேயே கூட்டாட்சி முறை செயற்பட வேண்டும்.

ஆதலால் நிர்வாகம் சார்ந்த அதிகாரமாக இருந்தாலும், சட்டமியற்றும் அதிகாரமாக இருந்தாலும், நீதி நிர்வாகம் சார்ந்த அதிகாரமாக இருந்தாலும் அரசியலமைப்பின் கட்டுப்பாட்டிலேயே இயங்கும். அரசியலமைப்புச் சட்டமே ஒரு நாட்டின் உயரிய சட்டமாக விளங்கும். அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணான எந்தச் சட்டமும் செல்லாததாகிவிடும்.

### எழுதப்பெற்ற அரசியலமைப்பு ( A written constitution )

கூட்டாட்சி முறையில் அரசியலமைப்பு எழுத்து வடிவத்தில் கட்டாயம் இருக்க வேண்டும். கூட்டாட்சி முறையின் அடிப்படை அரசுகளுக்கு இடையே உள்ள ஒப்பந்தமாகும். எழுத்துவடிவில் அரசியலமைப்பு இல்லாமலிருந்தால் இவ்வொப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது இயலாததாகிவிடும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஜித்துக்கான...

தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியானது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவிற்கு ஆதரவு வழங்கவுள்ளதாக நேற்று இடம்பெற்ற கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இந்நிலையில் குறித்த தீர்மானம் தொடர்பில் அக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கொழும்பு ஊடக மொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியானது ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது.

குறித்த தீர்மானம் தொடர்பில் இதுவரை தனக்கு உத்தியோகபூர்வமான அறிவிப்புக்கள் எதுவும் கிடைக்கவில்லை. இதனைத் தமிழரசுக் கட்சியின் உத்தியோகபூர்வமான அறிவிப்பு என்று ஏற்றுக்கொள்ளவும் முடியாது.

தவிர, இது ஒரு சிலரின் தனிப்பட்ட முடிவு எனவும் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் யோகேஸ்வரன் மற்றும் ஸ்ரீநேசன் ஆகியோரும் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7)

## திருக்கோணேஸ்...

தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் திருகோணமலையில் இடம்பெற்ற ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்துத் தெரிவிக்கையில்,

இந்துக்களின் பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வர ஆலயமானது உலக இந்துக்கள் அனைவரும் மிகவும் முக்கியத்துவம் கொடுக்கும் ஆலயம் என்பதுடன் திருக்கோணேஸ்வர ஆலயத்தின் கோபுரமானது இதுவரை காலமும் நிர்மாணம் செய்யப்படாமல் உள்ளது.

எனவே குறித்த திருக்கோணேஸ்வரர் ஆலயத்தின் கோபுரம் நிர்மாணிப்பதற்கான பொறுப்பை எமது அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது எனவும் குறித்த ஆலயத்தின் கோபுரத்தை நிர்மாணிக்க வேண்டிய பொறுப்பு என்னுடையது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியளித்தார்.

மேலும் இதனைத் தெரிவிக்கும்போது எனக்கு காலஞ்சென்ற பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஞாபகத்திற்கு வருகிறார். சம்பந்தன் தொடர்ந்து என்னை வலியுறுத்தி வந்தார். திருகோணமலை நகரை பெரிய அளவில் அபிவிருத்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். அதனை நான் நிச்சயம் நிறைவேற்றுவேன் என அவருக்கு நான் வாக்குறுதியளித்திருந்தது எனக்கு ஞாபகம் வந்தது. எனவே நாங்கள் வாக்குறுதியளித்தால் அதை நிறைவேற்றியே தீருவோம் என்றார். (ந-7)

## அடுத்த வாரம்...

அமர்வின் நிகழ்ச்சி இலக்கம் 2 இன் கீழ் இலங்கை விவகாரம் பட்டியலிடப்பட்டுள்ளதோடு, இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் அறிக்கை பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அறிக்கை தொடர்பான விவாதமும் இடம்பெற உள்ளது. (ந-7)

## விருப்பு வாக்கு...

தயாராக இருக்குமாறு தேர்தல் அதிகாரிகளுக்கு ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ள வாக்கு எண்ணும் நிலையங்களில் ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகளை எண்ணுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம்முறை முதல் வாக்கு எண்ணிக்கைக்குப் பிறகு, எந்த வேட்பாளரும் 51 சதவீத வாக்குகளைப் பெறாவிட்டால், இரண்டாவது விருப்பத் தேர்வை எண்ண வேண்டும்.

எனவே அதற்குத் தயாராக இருக்குமாறு அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதனால், ஒவ்வொரு வாக்கு எண்ணும் நிலையத்துக்கும் அனுப்பப்படும் வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, இரண்டாவது விருப்பத்தேர்வை எண்ணுவதற்கு, நான்கு அல்லது ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்களை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலின்போது 15 ஆயிரம் சிவில் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளை மூன்று நாட்கள் கடமையில் ஈடுபடுத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழு சிவில் பாதுகாப்பு திணைக்களத்திற்கு அறிவித்துள்ளது.

தேர்தல் ஆணையத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இது குறித்து தெரிவிக்கையில்,

இரண்டாவது விருப்பத்தை எண்ண வேண்டிய சூழ்நிலை ஏற்படின் அதன் முடிவுகள் வெளிவரும் வரை இறுதி முடிவுகளை எட்ட முடியாது என்றார். (ந-7)

## தமிழ்...

தமிழருக்கான தீர்வை வெளிப்படுத்தவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்க மற்றும் சஜித் பிரேமதாஸ ஆகிய இருவருமே தற்போதைய அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆயினும் 13 ஆவது திருத்தச் சட்டத்தினூடாக பொலிஸ், காணி மற்றும் நிதி ஏற்பாடுகளுடன் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்று இருவருமே உறுதியளிக்கவில்லை. இது அதிகாரப் பகிர்வு தொடர்பில் அவர்களின் நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

புதிய அரசியலமைப்பு ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று இருவரும் எந்தவிதமான விபரங்களும் இன்றி மொட்டையாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

புதிய அரசியலமைப்பின் மூலம் தமிழ்த் தேசியப் பிரச்சினை எவ்வாறு தீர்க்கப்படும் என்று எந்த யோசனைகளையும் இருவரும் துளியளவும் குறிப்பிடவில்லை" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## தீர்மானத்துக்கு...

தாஸ தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தன்னுடைய எக்ஸ் பக்க பதிவில், *உங்கள் ஆதரவுக்கு நன்றி ITAK @எம்.ஏ.சுமந்திரன்*

அனைவரும் வெற்றிபெறும் எதிர்காலத்தை உருவாக்குவோம். இன வெறி, பாகுபாடு இல்லாத எதிர்காலம் மற்றும் ஒற்றுமை, வலிமை மற்றும் பகிரப்பட்ட நோக்கத்தின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட எதிர்காலம் அனைவருக்கும் என பதிவிட்டுள்ளார். (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2024.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 5583
Y 1 7 1 7 0 3
அத சம்பத Y 1 7 0 3
சீட்டிழுப்பு இலக்கம் 158

தன நிதானய
திகதி - 2024.09.01
சீட்டிழுப்பு இலக்கம் - 1613
R 10 54 65 73 R
16378

மெகா பவர்
திகதி 01/09/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1931
0 05 16 27 33 36
99229

லக்கி 7 VIP
திகதி 2024.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 409
H 3 3 4 1 0 5 H

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3825
சீட்டிழுப்பு திகதி 01.09.2024
T 09 23 43 80
T 46481

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.09.01
சீட்டிழுப்பு இலக்கம் 0892
விருச்சிகம் 05 22 35 41 விருச்சிகம்
45618 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
01.09.2024 வெற்றி வாரம் 291 பழுப்பு
M 3 9 0 4 2 6
61537
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,193,536.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2557 ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 01.09.2024 தினம் ஞாயிறு
10 33 38 75 M
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,255,461,60
DLB

சனிதா
திகதி 2024.09.01 வெற்றி வாரம் 4718
42 52 54 55 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,668,650.40
67174
DLB

சசிரி
வெற்றி வாரம் 523
2024.09.01
கபிலம்
03 23 46
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,538,880/-
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4269 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.09.01 தினம் ஞாயிற்றுக்கிழமை
34 57 58 62
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,346,706.80
202779
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Z 22 19 36 38 75
சுப்பர் இலக்கம்
1733 மஞ்சள் 01.09.2024 ஞாயிற
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 542,393,100.20
DLB

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2383
சீட்டிழுப்பு திகதி : 2024.09.01
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,421,400.00
அட கோடீபதி ADA KOTIPATHI
02 25 37 64 Z
897683
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் சமாதானத்துக்காக 13 ஐ நிச்சயம் அமுலாக்குவேன்

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

13 வது திருத்தச் சட்டம் அரசியல் யாப்பில் உள்ளவாறாக அமுல்படுத்தப்பட்டு மாகாண சபைகள் வலுப்படுத்தப்படும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

யாழிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று காலை ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளை சந்தித்து தனது அரசியல்- பொருளாதார நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்குமேலும் கருத்து வெளியிட்ட அவர்,13 வது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் என்று உறுதியாகத் தெரிவிக்கும் ஒரேயொரு வேட்பாளர் நான் மட்டுமே.

ஜனாதிபதித் தேர்தலில் எனது வெற்றி நிச்சயமானது.

மேலும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலிலும் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றியீட்டி அரசாங்கத்தை அமைக்கும் அதேவேளை, 13 வது திருத்தத்தை அமுலாக்க வேண்டியது நாட்டின் எதிர்கால சமாதானத்துக்கும் அபிவிருத்திக்கும் அவசியமானதாகும்.

அது தேர்தலுக்கான வெறும் அரசியல் கோசம் அல்ல அது என் தாய் நாட்டின் மீது கொண்டுள்ள பற்றினால் எடுக்கப்படும் முடிவாகும் என்றார்.

நாட்டின் பொருளாதாரக் கொள்கையை தான் வலதுசாரித் துருவத்துக்கோ இடதுசாரித் துருவத்துக்கோ இழுத்துச் செல்லாமல் இடைப்பட்ட நடுவுப்பாதையூடான கொள்கை முன்னெடுப்பாக மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

ஜனநாயகமும் மானிட சமூகமும் மிக்க சமூகமயப்பட்ட சந்தைப் பொருளாதாரமே தனது பொருளாதாரக் கொள்கை எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

மக்களுக்கு சமத்துவமும் சமவாய்ப்பும் வழங்கும் மக்கள் நேய மிக்க, சூழல் பாதுகாப்பு மிக்க பொருளாதார முறைமை அறிமுகப்படுத்தப்படும்.

நாட்டைச் சூறையாடிய நபர்களிடமிருந்து சொத்துக்களும் பணமும் மீட்டெடுக்கப்படும். அதற்கான சட்டமும் புதிய பாராளுமன்றில் கொண்டுவரப்படும்.

தமிழர்களோ, முஸ்லிம்களோ, மலையகத் தமிழரோ, பறங்கி இனத்தவரோ அனைவரும் சட்டத்தின் முன் சமமாக மதித்துப் பேணப்படுவர்.

கொரோனாவால் இறந்த முஸ்லிம் மக்களின் ஜனாசாக்கள் கோட்டா அரசாங்கத்தால் இஸ்லாமிய முறைமைக்கு மாறாக எரிக்கப்பட்டபோது, அதற்கெதிராக ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே வீதிக்கிறங்கிப் போராடிய கட்சி எனவும் அவர் கூறினார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமர் கதிரையிலிருந்து இறங்கியபோது கோட்டாபய தன்னைப் பிரதமர் பதவியை ஏற்கும்படி கேட்டபோது தான் மறுத்துவிட்டதை ஞாபகப்படுத்திய சஜித், தான் மறுத்தமைக்கு இரண்டு காரணங்கள் இருந்தன எனவும் குறிப்பிட்டார்.

நாட்டின் பொருளாதாரத்தை வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்திருந்த ராஜபக்ஷ குடும்பத்திற்கு அடிமைப் பிரதமராகப் பணியாற்ற தான் விரும்பவில்லையென்றும் தான் மக்களிடம் புதிய ஆணையை தேர்தல் மூலம் பெற்று மக்களுக்கு சேவையாற்றவே விரும்பியதாகவும் தெரிவித்தார். (ந-7)


### இந்தியன் விசா சேவைகள்

ஒரு வருட E-Visa இப்பொழுது 9000/= ரூபாவிலிருந்தும்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
47,000/= இலிருந்து விசேட விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

APEX TRAVELS


0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(305)

### வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
074 17 37 684
(304)


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 11 - 11 - 1952 | 01 - 09 - 2024 |

### திரு.சரவணமுத்து மகேந்திரன்

யாழ். சுன்னாகம் கந்தரோடையைப் பிறப்பிடமாகவும் வரணி இயற்றாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மகேந்திரன் அவர்கள் 2024.09.01 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து - முத்துமணி தம்பதியினரின் அன்பு மகனும் சீதாலட்சுமியின் அன்புக் கணவரும் ஞானசேகரம் (பிரான்ஸ்), கமலாதேவி(சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சங்கீதா(இத்தாலி), தர்ஷிகா, தர்ஷிகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தயாதீசன்(இத்தாலி), சதீஷன், ஜனந்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 2024.09.02 இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊத்தல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

077 784 2008(சதீஷன்) (C-1101)


### வேலையாட்கள் தேவை

மென்பான விநியோக நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை.

- விற்பனைப் பிரதிநிதி (2 பேர்)
- Office Staff (அலுவலக உதவியாளர்) (பெண் ஊழியர் 2 பேர்)
- Storekeeper (களஞ்சியக் காப்பாளர்)
- Helper (உதவியாளர்) (2 பேர்)

(C-1102)

077 077 7620
077 226 9914

### வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் அமைந்துள்ள கருவாட்டுக் கடைக்கு சகல வேலைகளும் தெரிந்த சிங்களம் பேசி வியாபாரம் செய்யக்கூடிய வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 222 8312
(1839)

### வேலையாள் தேவை

நெடுந்தீவில் இயங்கும் பேக்கரி ஒன்றிற்கு தங்கி நின்று வேலை செய்யும் அனுபவமுள்ள வேலையாள் தேவை.(ஆண்)
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 631 9227
(1838)

### Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
Street,Jaffna.
College Of International Migration Skills
077 068 777 / 077 7719 322
(C-1100)

### V2 VISA SERVICES கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1100)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.